2026 ஜூலை மாதம் 22– ஆம் தேதி புதன்கிழமை

கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி

S.C. நெம்பர் : 32/2021

2026–ஆம் ஆண்டு ஜூலை மாதம் 22– ஆம் தேதி புதன்கிழமை

திருமதி.டி.சுபத்ரா, கிரேடு I பெஞ்ச் கிளர்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | PW12 (LW19) – புவனேஷ்வரன் |
| தகப்பனார் பெயர்: | ராஜேந்திரன் |
| ஊர்: | மண்டபம் |
| வட்டம்: | இராமநாதபுரம் |
| மாவட்டம்: | இராமநாதபுரம் |
| தொழில்: | கிராம நிர்வாக அலுவலர், மண்டபம் கிராமம். |
| வயது : | 37 |

22.07.2026

(1, 2, 3, 9 எதிரிகள் ஆஜர். 4 முதல் 8 எதிரிகள் ஆஜர் இல்லை, பிரிவு 355 BNSS –ன்படி மனுத்தாக்கல் செய்யப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகளின் வழக்கறிஞரும் ஆஜர்).

(சாட்சி அழைக்கப்பட்டு சம்பந்தப்பட்ட போலீசாரால் அவரது பணியாளர் அடையாள அட்டை மூலம் அடையாளம் காணப்பட்டு ஒப்பீடு செய்யப்பட்டு பின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் அளிக்கிறார்)

**முதல் விசாரணை:–**

1. நான் தற்சமயம் இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம் வட்டம், மண்டபம் கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றி வருகிறேன். நான் இராமநாதபுரம் மாவட்டத்தில் இரட்டையூரணி கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்தபோது, காரான் கிராமத்திற்கு கூடுதல் பொறுப்பு கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றி வந்தேன், கடந்த 29.02.2020ம் தேதி நானும், கிராம உதவியாளர் மாதவி என்பவரும் பணியிலிருந்தபோது, வட்டாட்சியர் எனக்கு அலைபேசியில் தகவல் சொல்லி சேதுநகருக்கு வரச்சொன்னார். நானும், கிராம உதவியாளரும் காலை 8.15 மணிக்கு சேதுநகருக்கு சென்றோம். கடமலைக்குண்டு காவல் ஆய்வாளர் அங்கு இருந்தார்.

2. 5 வது எதிரி செந்தில்குமார், 7 வது எதிரி கிஷோர், 8 வது எதிரி நாகராஜ் ஆகியோர்கள் கொலை சம்பவத்தில் ஈடுப்பட்டதாக ஆய்வாளர் கூறினார் (எதிரி தரப்பு ஆட்சேபனையுடன் பதிவு செய்யப்படுகிறது). 7 வது எதிரி கிஷோர் என்பவர் ஆய்வாளரிடம் வாக்குமூலம் கொடுத்தார். கடமலைக்குண்டு காவல் ஆய்வாளர் அதை மடிக்கணினியில் பதிவு செய்தார். கொலைக்கு பயன்படுத்திய நான்கு அரிவாள்களை ஆய்வாளர் அத்தாட்சியில் கைப்பற்றினார். அந்த அத்தாட்சியில் நானும், கிராம உதவியாளரும் கையொப்பம் செய்தோம். மேற்சொன்ன அரிவாள்கள் புங்கை மரம் அருகில் இருந்து 7 வது எதிரி கிஷோர் எடுத்து வந்து ஆஜர் செய்தார். ஒப்புதல் வாக்குமூலத்திலும் நான் கையொப்பம் செய்தேன்.

3. என்னிடம் காட்டப்படும் அத்தாட்சி மற்றும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். அவை முறையே **அ.சா.ஆ.8 மற்றும் அ.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.10** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் நான்கு அரிவாள்கள் நான் சம்பவ இடத்தில் பார்த்த 7 வது எதிரி கிஷோர் எடுத்து ஆஜர் செய்த அரிவாள்கள் தான். அது **சா.பொ.1 முதல் சா.பொ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>1 முதல் 9 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை –</u>**

4. அத்தாட்சியில் கடமலைக்குண்டு காவல்நிலைய குற்ற எண் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். எனக்கு கிராம நிர்வாக அலுவலர் முத்திரை உள்ளது என்றால் சரிதான். நான் கையொப்பம் செய்த ஆவணங்களில் முத்திரை வைக்கவில்லை என்றால் சரிதான். ஆவணங்கள் பின்னிட்டு காவல்நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டு, என்னிடமும், உதவியாளரிடமும் கையொப்பம் பெறப்பட்டதால் அத்தாட்சியில் குற்ற எண் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல.

5. சா.பொ.1 முதல் சா.பொ.4 அரிவாள்கள் பொதுவாக சந்தையில் கிடைக்கும் என்றால் சரிதான். நான் அரிவாள்களை கைப்பற்றிய தேதிக்கு பின்னிட்டு ஆறு ஆண்டுகள் கழித்து நீதிமன்றத்தில் தற்போது பார்க்கிறேன் என்றால் சரிதான்.

மேற்படி நான்கு அரிவாள்களுக்கும் தனிப்பட்ட அரிவாள்கள் இல்லை என்றால் சரிதான். புங்கை மரத்திற்கும், நான் சென்ற இடத்திற்கும் இடையே எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 100 மீட்டர் முதல் 200 மீட்டர் இருக்கும். புங்கை மரங்கள் இருக்கும் இடம் ஆடு, மாடுகள் மேய்ச்சல் இடம் என்றால் சரிதான். அத்தாட்சி, பார்வை மகஜர் மற்றும் ஒப்புதல் வாக்குமூலம் யார் எழுதினார்கள் என்றால் கடமலைக்குண்டு காவல் ஆய்வாளர் எழுதினார். 7 வது எதிரி கிஷோர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை கிஷோர் படித்து பார்த்தாரா என்றால் ஞாபகமில்லை.

6. ஒப்புதல் வாக்குமூலத்தை யார் தட்டச்சு செய்தார் என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல, காவலர் தட்டச்சு செய்தார். அவரது பெயர், எண் ஒப்புதல் வாக்குமூலத்தில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல, காவல் ஆய்வாளர் பெயர் உள்ளது. 29.02.2020 ம் தேதி நான் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றாலும், எலும்புக்கூடு பார்க்கவில்லை என்றாலும், என் முன்னிலையில் தோண்டி எலும்புக்கூடுகள் எடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. 7 வது எதிரி கிஷோர் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றாலும், அரிவாள்களை ஆஜர் செய்யவில்லை என்றாலும், போலீசார் சொல்லிக்கொடுத்து வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை** :– இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 22.07.2026 அன்று புதன்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI
Digitally signed by G SREE DEVI
Date: 2026.07.22 17:36:38 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
22.07.2026